**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சீர்காழி, மயிலாடுதுறை மாவட்டம்.**

முன்னிலை: திரு.R.கைலாஷ், B.A., B.L.,
நீதித்துறை நடுவர்,
சீர்காழி.

2026 ஆம் ஆண்டு மே திங்கள் 25 ஆம் நாள் திங்கள்கிழமை

**சுருக்கு வழக்கு எண்.82/2019**
**CNR.NO.TNMY08-000156-2019**

| | |
|---|---|
| குற்றமுறையீட்டாளர் : | **அரசுக்காக,**<br>காவல் ஆய்வாளர்,<br>புதுப்பட்டினம் காவல் நிலையம்,<br>மயிலாடுதுறை மாவட்டம்.<br>**குற்ற எண்.54/2017** |
| /எதிராக/ | |
| குற்றம்சாட்டப்பட்டவர்: | ஞானகுமார், 42/2017, த/பெ.முனியாண்டி, கீழவரவுகுடி, நிம்மேலி. சீர்காழி தாலுகா |
| குற்றச்சாட்டு | இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 279, 337 (51 counts), 338 (6 counts) |
| குற்றம் நிகழ்ந்த நாள் | 25.02.2017 |
| தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | 25.02.2017 |
| எதிரி கைது செய்யப்பட்ட நாள் | 27.02.2017 |
| எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | 27.02.2017 |
| கு.வி.மு.ச.பிரிவு 240-ன் கீழ் குற்றச்சாட்டு குறித்து எதிரியிடம் கேட்கப்பட்ட நாள் | 03.09.2024 |
| விசாரணை தொடங்கிய நாள் | 15.10.2024 |
| விசாரணை முடிவடைந்த நாள் | 25.05.2026 |
| கு.வி.மு.ச.பிரிவு 311-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் விபரம் | இல்லை |
| முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட தேதிகள் | |

| | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி.1 | 15.10.2024 | 15.10.2024 |
| அரசு தரப்பு சாட்சி.2 | 15.10.2024 | 15.10.2024 |



KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.05.25 18:35:05 +0530

<table>
<tr><td></td><td>
<table>
<tr><td>அரசு தரப்பு சாட்சி.3</td><td>15.10.2024</td><td>15.10.2024</td></tr>
<tr><td>அரசு தரப்பு சாட்சி.4</td><td>15.10.2024</td><td>15.10.2024</td></tr>
<tr><td>அரசு தரப்பு சாட்சி.5</td><td>15.10.2024</td><td>15.10.2024</td></tr>
<tr><td>அரசு தரப்பு சாட்சி.6</td><td>15.10.2024</td><td>15.10.2024</td></tr>
<tr><td>அரசு தரப்பு சாட்சி.7</td><td>15.10.2024</td><td>15.10.2024</td></tr>
<tr><td>அரசு தரப்பு சாட்சி.8</td><td>15.10.2024</td><td>15.10.2024</td></tr>
<tr><td>அரசு தரப்பு சாட்சி.9</td><td>22.07.2025</td><td>22.07.2025</td></tr>
<tr><td>அரசு தரப்பு சாட்சி.10</td><td>22.07.2025</td><td>22.07.2025</td></tr>
<tr><td>அரசு தரப்பு சாட்சி.11</td><td>02.08.2025</td><td>02.08.2025</td></tr>
</table>
</td></tr>
<tr><td>கு.வி.மு.ச.பிரிவு 313(1)(b)–ன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள்</td><td>06.08.2025</td></tr>
<tr><td>தலைமறைவு எதிரி குறித்த விபரம்</td><td>இல்லை</td></tr>
<tr><td>நீதிமன்ற வழக்கு விசாரணைக்கு விதிக்கப்பட்ட தடை குறித்த விபரம்</td><td>இல்லை</td></tr>
<tr><td>வழக்கு விசாரணையில் ஏற்பட்ட தாமதத்திற்கான காரணம்</td><td>எதிரிக்கு எதிராக பிடியாணை நிலுவையில் இருந்தது.</td></tr>
<tr><td>தீர்மானம்</td><td>எதிரி இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 279, 337 (51 counts), 338 (6 counts) ன் கீழ் குற்றவாளி என தீர்மானம்.</td></tr>
<tr><td>முடிவு</td><td>முடிவாக, எதிரி இந்திய தண்டனை சட்டம் பிரிவு 279ன் கீழான குற்றம் இழைத்ததற்கு 6 மாத காலம் மெய்க்காவல் சிறைத்தண்டனையும் மற்றும் ரூ.1,000/–(ரூபாய் ஆயிரம் மட்டும்) அபராதம் விதித்தும், பிரிவு 337(51 counts)ன் கீழான குற்றம் இழைத்ததற்கு தலா 1 வார காலம் மெய்க்காவல் சிறைத்தண்டனையும் மற்றும் தலா ரூ.100/–(ரூபாய் இருநூறு மட்டும் – மொத்தம் ரூ.5,100/–) அபராதம் விதித்தும், பிரிவு 338(4 counts)ன் கீழான குற்றம் இழைத்ததற்கு தலா 2 மாத காலம் மெய்க்காவல் சிறைத்தண்டனையும் மற்றும் தலா ரூ.250/– (ரூபாய் ஐநூறு மட்டும் – மொத்தம் ரூ.1,000/–) அபராதம் விதித்தும், அபராதத் தொகை செலுத்த தவறினால் (மொத்த அபராதத் தொகை – ரூ.7,100/–) இந்திய தண்டனை சட்டம் பிரிவு 64ன் கீழ் தலா ஒரு வார காலம் கூடுதலாக மெய்க்காவல்</td></tr>
</table>



KAILAASH R

Digitally signed by KAILAASH R
Date: 2026.05.25 18:35:35 +0530

| | |
|---|---|
| | சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் மேற்படி சிறைத்தண்டனைகளை எதிரி ஏககாலத்தில் அனுபவிக்க வேண்டும் எனவும் உத்தரவிடப்படுகிறது. |

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தால் கடந்த 21.02.2019 தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, என் முன்பாக இறுதியாக 25.05.2026 ஆம் தேதி விசாரணைக்கு வந்தபோது குற்றமுறையீட்டாளர் தரப்பில் உதவி அரசு குற்றவியல் வழக்கறிஞர் நிலை–II திருமதி. K. நிவேதா அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. K. வெங்கடேசன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்...

## தீர்ப்புரை

1. இவ்வழக்கானது கடந்த 25.02.2017ம் தேதி காலை 6.00 மணியளவில் மடவாமேட்டிலிருந்து பழையாறு செல்வதற்காக சீர்காழி – பழையார் செல்லும் TN 49 N 1464 என்ற எண்ணுள்ள டவுன் பஸ்ஸை நிம்மேலி வரவுகுடியை சேர்ந்த ஞானகுமார் என்பவர் சீர்காழியில் இருந்து டிரிப்பு எடுத்து மடவாமேடு கன்னிக்கோயில் அருகில் திரும்பும்போது தெற்கிலிருந்து வடக்கு நோக்கி திரும்பும்போது அஜாக்கிரதையாகவும், அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஒட்டி வந்து, அருகில் உள்ள பள்ளத்தில் பஸ் நிலை தடுமாறி கவிழ்ந்ததில், மேற்படி பேருந்தில் பயணம் செய்த 6 பயணிகளுக்கு கொடுங்காயத்தையும், 51 பயணிகளுக்கு சொற்ப காயத்தையும் ஏற்படுத்தியது சம்பந்தமாக புதுப்பட்டினம் காவல் நிலையத்தார் மேற்படி எதிரி 279, 337(51 counts), 279, 338(6 counts) இ.த.ச பிரிவுகளின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்ததாக கருதி தாக்கல் செய்த குற்ற இறுதி அறிக்கையின் அடிப்படையில் எழுந்த வழக்காகும்.

2. மேற்படி குற்ற இறுதி அறிக்கையில் எதிரிக்கு எதிராக முதல் தோற்ற வழக்கு எழுந்ததால் வழக்கானது இந்நீதிமன்றத்தால் கடந்த 21.02.2019 ஆம் தேதி கோப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் அவருக்கு கடந்த 22.08.2024ஆம் தேதி குற்றவியல் நடைமுறை சட்டப் பிரிவு 207–ன் கீழ் வழக்கு ஆவணங்களின் நகல் கட்டணமின்றி வழங்கப்பட்டது. பின்னர் கடந்த 03.09.2024 ஆம் தேதி இந்திய தண்டனை சட்டம் பிரிவு 279, 337, 338ன் கீழ் குற்றச்சாட்டின்



KAILAASH R

Digitally signed by KAILAASH R
Date: 2026.05.25 18:36:02 +0530

சாராம்சங்கள் குறித்து எதிரியிடம் விளக்கி கேட்கப்பட்டது. அதற்கு எதிரி பொய் வழக்கு என்றும், வழக்கு விசாரணை வேண்டுமென்றும் கூறினார். எனவே, இவ்வழக்கு சாட்சிகளின் விசாரணைக்காக உத்திரவிடப்பட்டது.

3. அதன் அடிப்படையில் இவ்வழக்கில் அரசுத் தரப்பில், அரசு தரப்பு சாட்சி.1 முதல் 11 சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டும், அரசு தரப்பு சான்றாவணம்.1 முதல் 65 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பட்டியல் சாட்சிகள் 4,6,8 முதல் 13 முதல் 57, 60 முதல் 69 ஆகியோர் உதவி அரசு குற்றவியல் வழக்கறிஞர் நிலை–2 அவர்கள் கொடுத்த குறிப்பாணையின் அடிப்படையில் விசாரிக்கப்படாமல் நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

4. இவ்வழக்கில் கடந்த 06.08.2025 ஆம் தேதி அரசு தரப்பு சாட்சியங்களில் எதிரிக்கு பாதகமாக தோன்றும் சாட்சியம் குறித்து அவற்றை கேள்விகளாகத் தொகுத்து குற்றவியல் விசாரணை முறை சட்டம் 313(1)(b)–ன் கீழ் வினவியபோது எதிரி அதனை மறுத்து பொய்சாட்சி, பொய் வழக்கு என்றும் தனது தரப்பில் விசாரிக்க வாய்மொழி சாட்சியம் இல்லை என கூறினார். எனவே, எதிரி தரப்பில் சாட்சியம் முடிக்கப்பட்டது. இருதரப்பு சாட்சிய விசாரணைகள் முடிக்கப்பட்டதால் இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது.

5. அரசு தரப்பில், எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பு சாட்சி.1 முதல் 11 சாட்சிகள் வாயிலாகவும், அரசு தரப்பு சான்றாவணம்.1 முதல் 65 சான்றாவணங்கள் வாயிலாகவும் எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே, எதிரிக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டுமென்றும் வாதிடப்பட்டது.

6. எதிரி தரப்பில், பேருந்தில் பயணம் செய்த அரசு தரப்பு சாட்சிகள் விபத்தின்போது தூங்கிக்கொண்டிருந்தார்கள் என்றும், இந்த விபத்திற்கு காரணம் எதிரி தான் என்று அவர்கள் அறுதியிட்டு சாட்சியமளிக்கவில்லை என்றும், நஷ்ட ஈடு பெறுவதற்காக நீதிமன்றத்தில் அவர்கள் பொய் சாட்சியம் அளித்துள்ளனர் என்றும், இரண்டு நபர்கள் இறந்ததற்கு எதிரி பொறுப்பல்ல என்றும், இவ்வழக்கில் மருத்துவர் எவரும் விசாரிக்கப்படவில்லை என்றும், எதிரிக்கும் இந்த குற்ற வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றும், எனவே எதிரியை இந்த வழக்கில் இருந்து விடுதலை செய்ய வேண்டும் என்று வாதிடப்பட்டது.

**7. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்.**

எதிரி மீது சுமத்தப்பட்ட இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 279, 337, 338 ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதேயாகும்.



KAILAASH R

Digitally signed by KAILAASH R
Date: 2026.05.25 18:36:24 +0530

8) **தீர்வு:**

8.1) அரசு வழக்கு எவ்வாறு அமைந்துள்ளது மற்றும் அரசு தரப்பில் எதிரி மீது இந்திய தண்டனை சட்ட பிரிவுகள் 279, 337, 338ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என பரிசீலிக்கும்போது, கடந்த 25.02.2017ம் தேதி காலை மடவாமேட்டிலிருந்து பழையார் செல்வதற்காக சீர்காழி – பழையார் செல்லும் TN 49 N 1464 என்ற எண்ணுள்ள டவுன் பஸ் சீர்காழியிலிருந்து டிரிப் எடுத்து மடவாமேடு கன்னிகோயில் அருகில் திரும்பும்போது தெற்கிலிருந்து வடக்கு நோக்கி அதிக வேகமாகவும், அஜாக்கிரைதையாகவும், கவனக்குறைவாகவும், ஓட்டி அருகில் உள்ள பள்ளத்தில் பஸ் நிலைதடுமாறி கவிழ்ந்ததில் பஸ்ஸில் பயணம் செய்த 6 பெண்கள் ஒரு ஆண் மற்றும் நடத்துனருடன் பஸ் பள்ளத்தில் கவிழ்ந்ததில் பஸ்ஸில் பயணம் செய்த தனக்கு வலது பக்க கன்னம், வலது கால் முட்டியில் பலத்த அடிபட்டு, வீக்கம் ஏற்பட்டது. பஸ்ஸில் பயணம் செய்தவர்களில் 67 பேரில் 45 பெண்களுக்கும் மற்றும் சிலருக்கு காயம் ஏற்பட்டு அங்கிருந்து சத்தம் போடவே அருகில் இருந்தவர்களின் உதவியுடன் அரசு மருத்துவமனையில் சேர்த்துள்ளனர். மேற்படி வாகன விபத்து சம்பந்தமாக பேருந்தின் ஓட்டுநரான எதிரிக்கு எதிராக இ.த.ச. பிரிவுகள் 279, 337, 338 ஆகியவற்றின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, இறுதியாக எதிரிக்கு எதிராக இ.த.ச. பிரிவுகள் 279, 337(51 counts), 338(6 counts) ஆகியவற்றின் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பு வழக்கு இவ்வாறு அமைந்துள்ளது.

8.2) **அரசு தரப்பு சாட்சி 1.ன்** சாட்சியத்தை ஆராய்ந்து பார்க்கும் போது அவர் இவ்வழக்கின் புகார்தாரர் என்பதும் விபத்தில் காயம்பட்டவர் என்பதும் தெரிய வருகிறது. அவர் தனது முதல் விசாரணையில், கடந்த 2017ம் வருடத்தைய மாதங்களுக்கு முன் காலை 05.45 மணியளவில் சீர்காழியில் இருந்து புறப்பட்டு பேருந்தில் ஏறி சென்று கொண்டு இருந்ததாகவும், தன்போது பேருந்தில் 65 பெண் பயணிகள் பயணம் செய்ததாகவும், தான் ஏறிய சிறிது நேரத்தில் பேருந்து சாலையோர பள்ளத்தில் கவிழ்ந்ததில் தனக்கு முழங்காலில் அடிபட்டது என்றும், தன்னோடு பயணம் செய்த அனைவருக்குமே காயம் ஏற்பட்டதாகவும், அரசு பேருந்தை ஓட்டிய ஓட்டுனர் விபத்து நடந்து உடனே இறங்கி ஓடிவிட்டதாகவும், இந்த விபத்திற்கு காரணம் அரசு பேருந்து ஓட்டிய ஓட்டுனரை தற்போது வயது முதிர்வு காரணமாக அடையாளம் காட்ட இயலாது என்றும், சீர்காழி அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டதாகவும், சிகிச்சையில் இருந்தபோது போலிசார் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சாட்சி



KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.05.25 18:36:30 +0530

மூலமாக அவரது புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் சாட்சியமளித்து அரசு தரப்புக்கு விரோதமாக சாட்சியமளித்து அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக மாறி சாட்சியமளித்துள்ளார்.

8.3) **அரசு தரப்பு சாட்சி 2.ன்** சாட்சியத்தை ஆராய்ந்து பார்க்கும் போது, அவரும் மேற்படி பேருந்தில் பயணித்து விபத்தில் காயம் பட்டவர் என்பது தெரியவருகிறது. அவர் தனது முதல் விசாரணையில், கடந்த 2017 வருடம் மாதங்களுக்கு முன்பு தேதி மாதம் நினைவில்லை காலை 05.45 மணி அளவில் சீர்காழியில் இருந்து புறப்பட்டு பழையார் செல்லும் அரசு பேருந்தில் மடவாமேடு நிறுத்தத்தில் தான் பேருந்தில் ஏறி சென்று கொண்டு இருந்ததாகவும், தன்னோடு பேருந்தில் 65 பெண் பயணிகள் பயணம் செய்ததாகவும், தான் ஏறிய சிறிது நேரத்தில் அரசு பேருந்து சாலையோர பள்ளத்தில் கவிழ்ந்தது. அதில் தனக்கு வலது தோள்பட்டையில் அடிப்பட்டது என்றும், தன்னோடு பயணம் செய்த அனைவருக்குமே காயம் ஏற்பட்டது. அரசு பேருந்தை ஓட்டிய ஓட்டுனர் விபத்து நடந்து உடனே இறங்கி ஓடிவிட்டார். வயது முதிர்வு காரணமாக விபத்து ஏற்படுத்திய பேருந்து ஓட்டுனரை அடையாளம் காட்ட இயலாது என்றும், தனக்கு ஏற்பட்ட காயத்திற்காக சீர்காழி அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்து கொண்டேன் என்று சொல்லி அரசு தரப்புக்கு விரோதமாக சாட்சியமளித்து பிறழ் சாட்சியாக மாறி சாட்சியமளித்துள்ளார்.

8.4) **அரசு தரப்பு சாட்சி 3.ன்** சாட்சியத்தை ஆராய்ந்து பார்க்கும் போது, அவரும் மேற்படி பேருந்தில் பயணித்து விபத்தில் காயம் பட்டவர் என்பது தெரிய வருகிறது. அவர் தனது முதல் விசாரணையில், கடந்த 2017 வருடம் மாதங்களுக்கு முன்பு தேதி மாதம் நினைவில்லை காலை 05.45 மணி அளவில் சீர்காழியில் இருந்து புறப்பட்டு பழையார் செல்லும் அரசு பேருந்தில் மடவாமேடு நிறுத்ததில் நான் பேருந்தில் ஏறி சென்று கொண்டு இருந்தேன். தன்னோடு பேருந்தில் 65 பெண் பயணிகள் பயணம் செய்தனர் என்றும், தான் ஏறிய சிறிது நேரத்தில் அந்த அரசு பேருந்து சாலையோர பள்ளத்தில் கவிழ்ந்தது என்றும், அதில் தனக்கு வலது முழங்கால் மற்றும் கையில் அடிப்பட்டது. தன்னோடு பயணம் செய்த அனைவருக்குமே காயம் ஏற்பட்டது. அரசு பேருந்தை ஓட்டிய ஓட்டுனர் விபத்து நடந்து உடனே இறங்கி ஓடிவிட்டார். விபத்து ஏற்படுத்திய பேருந்து ஓட்டுனரை அடையாளம் காட்ட இயலாது. தனக்கு ஏற்பட்ட காயத்திற்காக சீர்காழி அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்து கொண்டேன் என்று சொல்லி அரசு தரப்புக்கு விரோதமாக சாட்சியமளித்து பிறழ் சாட்சியாக மாறி சாட்சியமளித்துள்ளார்.



KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.05.25 18:36:35 +0530

8.5) **அரசு தரப்பு சாட்சி 4.ன்** சாட்சியத்தை ஆராய்ந்து பார்க்கும் போது, அவரும் மேற்படி பேருந்தில் பயணம் செய்து விபத்தில் காயம் பட்டவர் என்பது தெரிய வருகிறது. அவர் தனது முதல் விசாரணையில், கடந்த 2017 வருடம் மாதங்களுக்கு முன்பு தேதி மாதம் நினைவில்லை காலை 05.45 மணி அளவில் சீர்காழியில் இருந்து புறப்பட்டு பழையார் செல்லும் அரசு பேருந்தில் மடவாமேடு நிறுத்ததில் தான் பேருந்தில் ஏறி சென்று கொண்டு இருந்தபோது, தன்னோடு பேருந்தில் 65 பெண் பயணிகள் பயணம் செய்ததாகவும், தான் ஏறிய சிறிது நேரத்தில் தான் சென்ற அரசு பேருந்து சாலையோர பள்ளத்தில் கவிழ்ந்தது என்றும், அதில் தனக்கு இடுப்பு மற்றும் கை, காலில் அடிப்பட்டதாகவும், தன்னோடு பயணம் செய்த அனைவருக்குமே காயம் ஏற்பட்டது. அரசு பேருந்தை ஓட்டிய ஓட்டுனர் விபத்து நடந்து உடனே இறங்கி ஓடிவிட்டார். விபத்து ஏற்படுத்திய பேருந்து ஓட்டுனரை அடையாளம் காட்ட இயலாது என்றும், தனக்கு ஏற்பட்ட காயத்திற்காக சீர்காழி அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டதாகவும், சிகிச்சையில் இருந்த போது போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சொல்லி அரசு தரப்புக்கு விரோதமாக சாட்சியமளித்து பிறழ் சாட்சியாக மாறி சாட்சியமளித்துள்ளார்.

8.6) **அரசு தரப்பு சாட்சி 5.ன்** சாட்சியத்தை ஆராய்ந்து பார்க்கும் போது, அவரும் மேற்படி பேருந்தில் பயணம் செய்து விபத்தில் காயம் பட்டவர் என்பது தெரிய வருகிறது. அவர் தனது முதல் விசாரணையில், கடந்த 2017 வருடம் மாதங்களுக்கு முன்பு தேதி மாதம் நினைவில்லை காலை 06.00 மணி அளவில் சீர்காழியில் இருந்து புறப்பட்டு பழையார் செல்லும் அரசு பேருந்தில் மடவாமேடு நிறுத்ததில் நான் பேருந்தில் ஏறி சென்று கொண்டு இருந்தேன் என்றும், தன்னோடு பேருந்தில் 65 பெண் பயணிகள் பயணம் செய்தனர் என்றும், தான் ஏறிய சிறிது நேரத்தில் நான் சென்ற அரசு பேருந்து சாலையோர பள்ளத்தில் கவிழ்ந்தது. அதில் எனக்கு தலையில் அடிப்பட்டது என்றும், தன்னோடு பயணம் செய்த அனைவருக்குமே காயம் ஏற்பட்டது என்றும், அரசு பேருந்தை ஓட்டிய ஓட்டுனர் விபத்து நடந்து உடனே இறங்கி ஓடிவிட்டார் என்றும், விபத்து ஏற்படுத்திய பேருந்து ஓட்டுனரை அடையாளம் காட்ட இயலாது என்றும், தனக்கு ஏற்பட்ட காயத்திற்காக சீர்காழி அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்த கொண்டேன் என்றும் சொல்லி அரசு தரப்புக்கு விரோதமாக சாட்சியமளித்து பிறழ் சாட்சியாக மாறி சாட்சியமளித்துள்ளார்.



KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.05.25 18:36:41 +0530

8.7) **அரசு தரப்பு சாட்சி 6.ன்** சாட்சியத்தை ஆராய்ந்து பார்க்கும் போது, அவரும் மேற்படி பேருந்தில் பயணம் செய்து விபத்தில் காயம் பட்டவர் என்பது தெரிய வருகிறது. அவர் தனது முதல் விசாரணையில், கடந்த 2017 வருடம் மாதங்களுக்கு முன்பு தேதி மாதம் நினைவில்லை காலை 06.00 மணி அளவில் சீர்காழியில் இருந்து புறப்பட்டு பழையார் செல்லும் அரசு பேருந்தில் மடவாமேடு நிறுத்ததில் தான் பேருந்தில் ஏறி சென்று கொண்டு இருந்தேன் என்றும், தன்னோடு பேருந்தில் 65 பெண் பயணிகள் பயணம் செய்தனர். தான் ஏறிய சிறிது நேரத்தில் தான் சென்ற அரசு பேருந்து சாலையோர பள்ளத்தில் கவிழ்ந்தது. அதில் தனக்கு இடுப்பு, கை மற்றும் கன்னத்தில் அடிப்பட்டு காயம் ஏற்பட்டது. தன்னோடு பயணம் செய்த அனைவருக்குமே காயம் ஏற்பட்டது என்றும், அரசு பேருந்தை ஓட்டிய ஓட்டுனர் விபத்து நடந்து உடனே இறங்கி ஓடிவிட்டார் என்றும், விபத்து ஏற்படுத்திய பேருந்து ஓட்டுனரை அடையாளம் காட்ட இயலாது என்றும், தனக்கு ஏற்பட்ட காயத்திற்காக சீர்காழி அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டேன் என்றும் சொல்லி அரசு தரப்புக்கு விரோதமாக சாட்சியமளித்து பிறழ் சாட்சியாக மாறி சாட்சியமளித்துள்ளார்.

8.8) **அரசு தரப்பு சாட்சி 7.ன்** சாட்சியத்தை ஆராய்ந்து பார்க்கும் போது, அவரும் மேற்படி பேருந்தில் பயணம் செய்து விபத்தில் காயம் பட்டவர் என்பது தெரிய வருகிறது. அவர் தனது முதல் விசாரணையில், கடந்த 2017 வருடம் மாதங்களுக்கு முன்பு தேதி மாதம் நினைவில்லை காலை 06.00 மணி அளவில் சீர்காழியில் இருந்து புறப்பட்டு பழையார் செல்லும் அரசு பேருந்தில் மடவாமேடு நிறுத்தத்தில் தான் பேருந்தில் ஏறி சென்று கொண்டு இருந்ததாகவும், தன்னோடு பேருந்தில் 65 பெண் பயணிகள் பயணம் செய்தனர் என்றும், தான் ஏறிய சிறிது நேரத்தில் தான் சென்ற அரசு பேருந்து சாலையோர பள்ளத்தில் கவிழ்ந்தது. அதில் தனக்கு தலையில் அடிப்பட்டு காயம் ஏற்பட்டது. என்னோடு பயணம் செய்த அனைவருக்குமே காயம் ஏற்பட்டது. அரசு பேருந்தை ஓட்டிய ஓட்டுனர் விபத்து நடந்து உடனே இறங்கி ஓடிவிட்டார். விபத்து ஏற்படுத்திய பேருந்து ஓட்டுனரை அடையாளம் காட்ட இயலாது. எனக்கு ஏற்பட்ட காயத்திற்காக சீர்காழி அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்து கொண்டேன் என்றும் சொல்லி அரசு தரப்புக்கு விரோதமாக சாட்சியமளித்து பிறழ் சாட்சியாக மாறி சாட்சியமளித்துள்ளார்.



KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.05.25 18:36:46 +0530

8.9) **அரசு தரப்பு சாட்சி 8.ன்** சாட்சியத்தை ஆராய்ந்து பார்க்கும் போது, அவரும் மேற்படி பேருந்தில் பயணம் செய்து விபத்தில் காயம்பட்டவர் என்பது தெரிய வருகிறது. அவர் தனது முதல் விசாரணையில், கடந்த 2017 வருடம் மாதங்களுக்கு முன்பு தேதி மாதம் நினைவில்லை காலை 06.00 மணி அளவில் சீர்காழியில் இருந்து புறப்பட்டு பழையார் செல்லும் அரசு பேருந்தில் மடவாமேடு நிறுத்தத்தில் தான் பேருந்தில் ஏறி சென்று கொண்டு இருந்ததாகவும், தன்னோடு பேருந்தில் 65 பெண் பயணிகள் பயணம் செய்தனர் என்றும், தான் ஏறிய சிறிது நேரத்தில் தான் சென்ற அரசு பேருந்து சாலையோர பள்ளத்தில் கவிழ்ந்ததில் தனக்கு மயக்கம் ஏற்பட்டது என்றும், தன்னோடு பயணம் செய்த அனைவருக்குமே காயம் ஏற்பட்டது. அரசு பேருந்தை ஓட்டிய ஓட்டுனர் விபத்து நடந்து உடனே இறங்கி ஓடிவிட்டார். விபத்து ஏற்படுத்திய பேருந்து ஓட்டுனரை அடையாளம் காட்ட இயலாது. எனக்கு ஏற்பட்ட காயத்திற்காக சீர்காழி அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்து கொண்டேன் என்றும் சொல்லி அரசு தரப்புக்கு விரோதமாக சாட்சியமளித்து பிறழ் சாட்சியாக மாறி சாட்சியமளித்துள்ளார்.

8.10) **அரசு தரப்பு சாட்சி 9.ன்** சாட்சியத்தை ஆராய்ந்து பார்க்கும் போது, அவர் பார்வை மகசர் சாட்சியாக முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளார் என்பது தெரிய வருகிறது. அவர் தனது முதல் விசாரணையில், கடந்த 25.02.2017ம் தேதி பகல் 12.00 மணியளவில் மடவாமேட்டில் உள்ள கன்னியம்மன்கோயில் அருகில் நடந்த விபத்து சம்பந்தமாக போலிசார் சாட்சி கையொப்பம் கேட்டதாகவும், தானும் சிவா என்பவரும் கையெழுத்து போட்டதாகவும், பார்வை மகசரில் உள்ள முதலாவது கையெழுத்து தன்னுடையது என்றும், மேற்படி சாட்சி மூலமாக அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் சாட்சியமளித்துள்ளார். அவர் தனது குறுக்கு விசாரணையில், போலசார் தன்னிடம் மடவாமேடு தங்கள் ஊரில் வைத்து தான் கையெழுத்து வாங்கியதாகவும், சம்பவம் நடந்த இடத்தில் தன்னிடம் கையெழுத்து வாங்கவில்லை என்றும், அதில் உள்ள விபரம் தனக்கு தெரியாது என்றும், போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையொப்பம் செய்தேன் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

8.11) **அரசு தரப்பு சாட்சி 10.ன்** சாட்சியத்தை ஆராய்ந்து பார்க்கும் போது, அவர் பார்வை மகசர் சாட்சியாக முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளார் என்பது தெரிய வருகிறது. அவர் தனது முதல் விசாரணையில், கடந்த 25.02.2017ம் தேதி பகல் 12.00 மணியளவில் மடவாமேட்டில் உள்ள கன்னியம்மன்கோயில் அருகில் நடந்த விபத்து சம்பந்தமாக போலிசார் சாட்சி



KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.05.25 18:36:52 +0530

கையொப்பம் கேட்டதாகவும், தானும் ராஜசேகர் என்பவரும் கையெழுத்து போட்டதாகவும், பார்வை மகசரில் உள்ள முதலாவது கையெழுத்து தன்னுடையது என்றும், மேற்படி சாட்சி மூலமாக அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் சாட்சியமளித்துள்ளார். அவர் தனது குறுக்கு விசாரணையில், போலசார் தன்னிடம் மடவாமேடு தங்கள் ஊரில் வைத்து தான் கையெழுத்து வாங்கியதாகவும், சம்பவம் நடந்த இடத்தில் தன்னிடம் கையெழுத்து வாங்கவில்லை என்றும், அதில் உள்ள விபரம் தனக்கு தெரியாது என்றும், போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையொப்பம் செய்தேன் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

8.12) **அரசு தரப்பு சாட்சி 11.ன்** சாட்சியத்தை ஆராய்ந்து பார்க்கும் போது, அவர் வைத்தீஸ்வரன் கோவில் காவல் நிலையத்தின் தற்போதைய உதவி ஆய்வாளர் என்பதும் அவர் ஆவணங்களின் அடிப்படையில் இவ்வழக்கு புலன் விசாரணை அதிகாரி சார்பாக சாட்சியம் அளித்துள்ளதும் தெரிய வருகிறது. அவர் தனது முதல் விசாரணையில், கடந்த 25.02.2017ம் தேதி காலை 8.00 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் அங்கப்பன் என்பவர் காவல் நிலைய பொறுப்பில் இருந்தபோது, மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலை பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த அ.சா.1ஐ விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று, காவல் நிலைய குற்ற எண் 84/2017ல் இ.த.ச பிரிவுகள் 279,337 ஆகியவற்றின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது பற்றியும், வழக்கு கோப்புகளை மேல்விசாரணைக்காக சிறப்பு உதவி ஆய்வாளர் அங்கப்பன், உதவி ஆய்வாளர் தியாகராஜன் ஆகியோர் பார்வைக்கு வைத்ததாகவும், அன்றைய தினமே பகல் 12.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தது பற்றியும், பட்டியல் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பெற்றது பற்றியும், கடந்த 30.04.2017ம் தேதி காலை 10.00 மணிக்கு இந்த வழக்கு சட்டப்பிரிவுகளான இ.த.ச 279, 337 யை 279, 337, 338 இ.த.ச.வாக சட்டப்பிரிவு மாற்று அறிக்கை தயார் செய்தது பற்றியும், எதிரியை தேடிவந்த நிலையில் 27.02.2017ம் தேதி 08.00 மணிக்கு புதுப்பட்டினம் காவல் நிலையம் முன்பு ஆஜர்படுத்தப்பட்ட எதிரியை குற்ற காரணம் கூறி கைது செய்து தக்க இருநபர் காவல்நிலைய பிணையில் விடுவித்துள்ளார். மோட்டார் வாகன ஆய்வாளர் காஞ்சி அவர்களையும் விசாரித்து வாக்குமூலம் பெற்று அவரிடமிருந்து மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்றது பற்றியும், காயம்பட்ட நபர்களுக்கு சிகிச்சை அளித்த பல்வேறு மருத்துவர்களையும் விசாரணை செய்து காயச்சான்று பெற்றது பற்றியும், பின்பு புலன் விசாரணை முடிக்கப்பட்டு 18.02.2019 தேதியன்று இவ்வழக்கின் எதிரிக்கு எதிராக இ.த.ச



KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.05.25 18:36:57 +0530

பிரிவுகள் 279, 337, 338 ஆகியவற்றின் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தது பற்றியும் சாட்சியமளித்துள்ளார். மேற்படி சாட்சி மூலமாக முதல் தகவல் அறிக்கை, பார்வை மகஜர், மாதிரி வரைபடம், பிரேத விசாரணை அறிக்கைகள், சட்டப்பிரிவு மாற்று அறிக்கை, மோட்டார் வாகன ஆய்வறிக்கை, விபத்து பதிவேட்டுடன் கூடிய காய சான்றிதழ்கள் ஆகியவை முறையே அ.சா.ஆ.4 – 65 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**9.** மேலே குறிப்பிடப்பட்ட சாட்சியங்கள் மற்றும் இந்த வழக்கின் சூழ்நிலைகள் ஆகியவற்றை கருத்தில் கொண்டு, எதிரி மீதான **இ.த.ச. பிரிவு 279ன்** கீழான குற்றச்சாட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பது குறித்து பரிசீலிக்கும்போது, மேற்படி சட்டப்பிரிவானது மனித உயிருக்கு ஆபத்து உண்டாக்கும் விதமாக ஒரு பொது பாதையில் வாகனத்தை முரட்டுத்தனமாக அல்லது அசட்டையாக செலுத்துகிற செயலை தண்டனைக்குரிய குற்றமாக கருதுகிறது. சம்பவ நாளான 25.02.2017ம் தேதியன்று TN 49 N 1464 என்கிற பதிவெண் கொண்ட நகர பேருந்தை இவ்வழக்கின் எதிரி ஞானகுமார் தான் ஓட்டினார் என்பதும், அந்த பேருந்து மேற்படி தேதியன்று காலை சுமார் 06.00 மணியளவில் சீர்காழியில் இருந்து பழையார் நோக்கி செல்லும் சாலையில் மடவாமேடு என்னும் பகுதியில் வந்து கொண்டிருந்தபோது, சாலையின் ஓரத்தில் அமைந்திருந்த பள்ளத்தில் பேருந்து நிலைதடுமாறி கவிழ்ந்து விபத்து ஏற்பட்டது என்பது இவ்வழக்கின் புகார் (அ.சா.ஆ.1), முதல் தகவல் அறிக்கை (அ.சா.ஆ.4), மோட்டார் வாகன ஆய்வறிக்கை (அ.சா.ஆ.8) ஆகிய ஆவணங்கள் வாயிலாகவும், காவல்துறை அதிகாரி உள்ளிட்ட அரசுதரப்பு சாட்சிகள் வாயிலாகவும் நிரூபணம் ஆகிறது. பேருந்தில் பயணித்த இவ்வழக்கில் சாட்சியம் அளித்த நபர்கள் விபத்திற்கு பிறகு உடனே பேருந்து ஓட்டுனர் அங்கிருந்து ஓடிவிட்டதாகவும் அதனால் தாங்கள் அவரை பார்க்கவில்லை என்றும் சொல்லி ஒன்றுபோல இவ்வழக்கு எதிரியை அடையாளம் காட்டாது பிறழ் சாட்சியாக மாறி சாட்சியம் அளித்திருப்பினும், அவரவர்கள் தங்கள் குறுக்கு விசாரணையில் எதிரி தங்கள் ஊருக்கு வரும் பேருந்தின் ஓட்டுனர் என்று மறைமுகமாக அடையாளம் காட்டியுள்ளார்கள். அது தவிர, எதிரி தரப்பில் நீதிமன்ற கேள்விகளின் போதோ அல்லது சாட்சிய குறுக்கு விசாரணைகளின்போதோ சம்பவ சமயத்தில் விபத்தில் சம்பந்தப்பட்ட பேருந்தை தான் ஓட்டவில்லை என்கிற ரீதியில் எந்த ஒரு எதிர்வாதமும் முன்னெடுக்கப்படவில்லை. மாறாக, 'பொய் வழக்கு', 'பொய் சாட்சியம்' என்று பொதுப்படையான மறுப்பு மட்டுமே தெரிவிக்கப்பட்டுள்ளது. இவற்றிற்கு மேல், காவல்துறை அதிகாரியின் சாட்சியம் மற்றும் மோட்டார் வாகன ஆய்வறிக்கை ஆகியவற்றை பரிசீலிக்கும்போது, சம்பவ சமயத்தில் எதிரிதான்



KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.05.25 18:37:03 +0530

இவ்விபத்தில் சம்பந்தப்பட்ட பேருந்தை இயக்கினார் என்பது அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுவிட்டதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**10.** பேருந்து பள்ளத்தில் கவிழ்ந்த நிகழ்வானது எதிரி முரட்டுத்தனமாக அல்லது அசட்டையாக பேருந்தை செலுத்தியதால் நிகழ்ந்ததா என ஆராயும்போது, ஓட்டுனரான எதிரியின் கட்டுப்பாட்டில் செலுத்தப்பட்ட பேருந்து சாலையை விட்டு வெளியே சென்று சாலை ஓரத்தில் அமைந்திருந்த பள்ளத்தில் விழுந்து கவிழ்ந்துள்ளது தெரிய வருகிறது. சாலை விபத்து வழக்குகளில் ஓட்டுநரின் அஜாக்கிரதையை முடிவு செய்வது குறித்து மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் ***K.K. Mani v. State*** ***2009 MLJ CRI 3 700*** என்னும் வழக்கின் தீர்ப்பில்

**" It is also the law that if a person is driving the vehicle he is under a duty to control it. He would be prima facie guilty of negligence if the vehicle left the road and it was for the person, who was driving the vehicle, to explain the the circumstances under which the vehicle had left the road. These circumstances may be beyond control of the driver and may even exculpate him, but in the absence of such a situation the fact that the vehicle had left the road would be evidence of negligence on the part of the driver."** என்று இயம்பியுள்ளது. ஆகவே, மேற்படி முன்தீர்ப்பின் அடிப்படையிலும், மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் (அ.சா.ஆ.8) இயந்திரகோளாறினால் வாகன விபத்து ஏற்படவில்லை என கருத்துரை வழங்கப்பட்டிருப்பதன் அடிப்படையிலும் இவ்வழக்கின் எதிரியான ஞானகுமார் தான் மேற்படி பேருந்தை சாலையில் முரட்டுத்தனமாகவும் மற்றும் அசட்டையாகவும் செலுத்தி வாகன விபத்தை ஏற்படுத்தியுள்ளார் என்பது தெள்ளத்தெளிவாக அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. ஆகவே, எதிரியின் மீதான இ.த.ச. பிரிவு 279ன் கீழான குற்றச்சாட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.

11. எதிரி மீதான **இ.த.ச. பிரிவு 337ன்** கீழான குற்றச்சாட்டை பொறுத்தளவில், மேற்படி சட்டப்பிரிவானது, <u>மனித உயிருக்கு அல்லது உடல் பாதுகாப்பிற்கு அபாயம் விளைவிக்கிற செய்கையை செய்து ஒருவருக்கு காயம் விளைவித்தலை</u> தண்டனைக்குரிய குற்றமாக கருதுகிறது. மேற்சொன்ன வகையில் எதிரி அசட்டையாக பேருந்தை செலுத்தி, அப்பேருந்து சாலையின் ஓரமாக அமைந்த பள்ளத்தில் கவிழ்ந்ததில் மேற்படி பேருந்தில் பயணித்த அநேக பயணிகளுக்கு சொற்பகாயம் ஏற்பட்டுள்ளது என்பது முதல் தகவல் அறிக்கை மற்றும் அவரவரின் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் மூலமாகவும் தெரியவருகிறது. மேற்படி விபரங்களாவன:



KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.05.25 18:37:11 +0530

| வ.எண் | பயணியின் பெயர் | காயச்சான்று |
|---|---|---|
| 1. | மாரியம்மாள் க/பெ. மாயகிருஷ்ணன் | அ.சா.ஆ.7 |
| 2. | பால்ராஜ் த/பெ. சின்னவீரப்பன் | அ.சா.ஆ.9 |
| 3. | சந்திரா க/பெ.ரவி | அ.சா.ஆ.10 |
| 4. | கோமதி க/பெ. கண்ணுசாமி | அ.சா.ஆ.11 |
| 5. | பாப்பாத்தி, த/பெ. உத்திராபதி | அ.சா.ஆ.12 |
| 6. | பிச்சம்மாள் க/பெ. குஞ்சிதபாதம் | அ.சா.ஆ.13 |
| 7. | மீரா க/பெ. செல்லதுரை | அ.சா.ஆ.14 |
| 8. | தனலெட்சுமி க/பெ. வீரசுந்தரம் | அ.சா.ஆ.16 |
| 9. | சித்ரா க/பெ. இடும்பன் | அ.சா.ஆ.17 |
| 10. | மாரியம்மாள் க/பெ. ராஜேந்திரன் | அ.சா.ஆ.18 |
| 11. | செல்வராணி க/பெ. கர்ணன் | அ.சா.ஆ.19 |
| 12. | ஆச்சிகண்ணு க/பெ.ராஜமாணிக்கம் | அ.சா.ஆ.20 |
| 13. | பானுமதி க/பெ. சீத்தாராமன் | அ.சா.ஆ.21 |
| 14. | அஞ்சம்மாள் க/பெ. மாணிக்கசாமி | அ.சா.ஆ.23 |
| 15. | சுந்தரி க/பெ. பூபாலன் | அ.சா.ஆ.24 |
| 16. | ஆராயி க/பெ. இராமசாமி | அ.சா.ஆ.25 |
| 17. | விஜயா க/பெ. ராஜேஷ் | அ.சா.ஆ.26 |
| 18. | ஜெயந்தி க/பெ. ஜெயராமன் | அ.சா.ஆ.27 |
| 19. | குப்பம்மாள் க/பெ. சண்முகம் | அ.சா.ஆ.28 |
| 20. | காந்திமதி க/பெ. ரோஜாமணி | அ.சா.ஆ.29 |
| 21. | பாப்பாத்தி க/பெ. காசிநாதன் | அ.சா.ஆ.30 |
| 22. | அஞ்சம்மாள் க/பெ. கலியபெருமாள் | அ.சா.ஆ.32 |
| 23. | காளியம்மாள் க/பெ. அண்ணாமலை | அ.சா.ஆ.33 |
| 24. | அமிர்தவள்ளி க/பெ. சாமிக்கண்ணு | அ.சா.ஆ.34 |
| 25. | சுமதி க/பெ. முருகையன் | அ.சா.ஆ.35 |
| 26. | கருத்தம்மாள் க/பெ. ராமஜெயம் | அ.சா.ஆ.37 |
| 27. | சுமதி க/பெ. குள்ளான் | அ.சா.ஆ.38 |



KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.05.25 18:37:17 +0530

| | | |
|---|---|---|
| 28. | இருசம்மாள் க/பெ. அகோரம் | அ.சா.ஆ.39 |
| 29. | குள்ளம்மாள் க/பெ. முருகையன் | அ.சா.ஆ.40 |
| 30. | முனியம்மாள் க/பெ. முத்துகுமரன் | அ.சா.ஆ.41 |
| 31. | ஏலாச்சி க/பெ. ரெங்கசாமி | அ.சா.ஆ.42 |
| 32. | சுமத்திரா க/பெ. செல்வம் | அ.சா.ஆ.43 |
| 33. | செந்தாமரை க/பெ. கோவிந்தராஜ் | அ.சா.ஆ.44 |
| 34. | பட்டு க/பெ. முத்து சிங்காரவேலன் | அ.சா.ஆ.45 |
| 35. | ராஜகுமாரி க/பெ. சுப்ரமணியன் | அ.சா.ஆ.46 |
| 36. | கலைவாணி க/பெ. சந்திரன் | அ.சா.ஆ.47 |
| 37. | ஆச்சி க/பெ. அஞ்சப்பன் | அ.சா.ஆ.48 |
| 38. | ராணி க/பெ. ஆறுமுகம் | அ.சா.ஆ.51 |
| 39. | பெரியார் த/பெ. கருப்பையன் | அ.சா.ஆ.52 |
| 40. | ஜானகி க/பெ. குப்புசாமி | அ.சா.ஆ.54 |
| 41. | அஞ்சம்மாள் க/பெ. கோட்டையன் | அ.சா.ஆ.55 |
| 42. | செண்பகவள்ளி க/பெ. செல்வம் | அ.சா.ஆ.56 |
| 43. | தனவள்ளி க/பெ. மாரிமுத்து | அ.சா.ஆ.57 |
| 44. | கஸ்தூரி க/பெ. இன்பராஜ் | அ.சா.ஆ.58 |
| 45. | சண்முகபிரியா க/பெ.வேலவன் | அ.சா.ஆ.59 |
| 46. | அபினயா த/பெ. வேலவன் | அ.சா.ஆ.60 |
| 47. | அட்சயா த/பெ. வேலவன் | அ.சா.ஆ.61 |
| 48. | திரிபுரசுந்தரி க/பெ.கோவிந்தன் | அ.சா.ஆ.62 |
| 49. | விமலா த/பெ. கோவிந்தன் | அ.சா.ஆ.63 |
| 50. | சாமிதுரை த/பெ. கலியபெருமாள் | அ.சா.ஆ.64 |
| 51. | சங்கர் த/பெ. கணேசன் | அ.சா.ஆ.65 |

மேற்படி ஆவணங்கள், இவ்வழக்கின் புகார், முதல் தகவல் அறிக்கை மற்றும் காவல்துறை அதிகாரியின் சாட்சியம் (அ.சா.11) ஆகியவற்றை ஒரு சேர பரிசீலிக்கையில், எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களுள் இ.த.ச.பிரிவு 337ன் கீழான குற்றச்சாட்டு 51 Countsக்கு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.



KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.05.25 18:37:24 +0530

**13**. எதிரி மீதான **இ.த.ச. பிரிவு 338ன்** கீழான குற்றச்சாட்டை பொறுத்தளவில், மேற்படி சட்டப்பிரிவானது, மனித உயிருக்கு அல்லது உடல் பாதுகாப்பிற்கு அபாயம் விளைவிக்கிற செய்கையை செய்து ஒருவருக்கு கொடுங்காயம் விளைவித்தலை தண்டனைக்குரிய குற்றமாக கருதுகிறது. மேற்சொன்ன வகையில் எதிரி அசட்டையாக பேருந்தை செலுத்தி, அப்பேருந்து சாலையின் ஓரமாக அமைந்த பள்ளத்தில் கவிந்ததில் மேற்படி பேருந்தில் பயணித்த அநேக பயணிகளுக்கு கொடுங்காயம் ஏற்பட்டுள்ளது என்பது முதல் தகவல் அறிக்கை மற்றும் அவரவரின் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் மூலமாகவும் தெரியவருகிறது. மேற்படி விபரங்களாவன:

| **வ.எண்** | **பயணியின் பெயர்** | **காயச்சான்று** |
|---|---|---|
| 1. | பழனியாயி க/பெ. கிருஷ்ணன்(Grevious) | அ.சா.ஆ.22 |
| 2. | அஞ்சலை க/பெ. வைரக்கண்ணு(Grevious) | அ.சா.ஆ.31 |
| 3. | அபிராமி க/பெ. பாலையா (Grevious) | அ.சா.ஆ.36 |
| 4. | பாப்பாத்தி க/பெ. உத்திராபதி (Grevious) | அ.சா.ஆ.49 |
| 5. | லல்லி க/பெ. நாகேஷ் | அ.சா.ஆ.50 |
| 6. | அபூர்வம் க/பெ. மாணிக்கம் (Grevious) | அ.சா.ஆ.53 |

மேற்படி காயச்சான்றிதழ்களின் அடிப்படையில் சம்மந்தப்பட்ட நபர்களுக்கு ஏற்பட்டது 'கொடுங்காயம்' என்பது அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுவிட்டதா என்பது குறித்து ஆராயும்போது, இவ்வழக்கில் மேற்படி பயணிகளுக்கு சிகிச்சை அளித்த மற்றும் காயச்சான்றுகள் வழங்கிய மருத்துவர்கள் எவரும் சாட்சியாக அரசு தரப்பில் விசாரிக்கப்படவில்லை. குற்ற வழக்குகளில் சாட்டப்படும் 'கொடுங்காயம்' என்னும் குற்றச்சாட்டை நிரூபணம் செய்வது குறித்து மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் ***In Re. Joseph @ Duraian*** *1985 MLJ CRI 1 1* என்னும் வழக்கின் தீர்ப்பில்

**" The doctor can say whether the injury is simple or grievous only from the clinical point of view, but whether the same is simple or grievous from the legal point of view is for the Court to decide. Indian Penal Code has defined 'hurt' and 'grievous hurt' respectively under Sections 39 and 320 and in the latter Section the Code has listed the hurts which could be considered as grievous and it has made clear that only such hurts would be grievous and not the others. Therefore, when the enumeration is limitative the Court has necessarily to give a finding whether a hurt is grievous and if**



KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.05.25 18:37:31 +0530

**so under which of the categories listed in the code. If for instance, the certificate of the deposition of the doctor shows that there is fracture of bone, nothing more would be necessary for the Court to come to the conclusion that it is a grievous hurt. But, on the other hand when the doctor opines that clinically it is a grievous injury and that the injury does not come directly as per its description under any of the categories listed in the Code, it is the duty of the prosecution show how it is grievous hurt in the legal sense and then it is the duty of the Court while giving the finding what it amounts to in terms of the hurts listed under Section 320 I.P.C"** என்று இயம்பியுள்ளது.

**14.** மேற்படி முன்தீர்ப்பின் அடிப்படையில் மேலே பட்டியலிடப்பட்டுள்ள காயச்சான்றிதழ்கள் அனைத்தையும் நன்கு பரிசீலிக்கும்போது, விபத்து ஏற்பட்ட பேருந்தில் பயணித்த **பழனியாயி க/பெ கிருஷ்ணன்** என்னும் பயணிக்கு மூக்கில் எலும்பு முறிவும், **அஞ்சலை க/பெ. வைரக்கண்ணு** என்னும் பயணிக்கு முதுகில் எலும்பு முறிவும், **அபிராமி க/பெ. பாலையா** என்னும் பயணிக்கு இடுப்பில் எலும்பு முறிவும், **அபூர்வம் க/பெ. மாணிக்கம்** என்னும் பயணிக்கு முதுகில் எலும்பு முறிவும் ஏற்பட்டது என்பதை அறியமுடிகிறது. மேற்படி நான்கு பயணிகளுக்கும் ஏற்பட்ட காயமாக குறிக்கப்பட்டுள்ளது இ.த.ச பிரிவு 320ன் பாற்படும் கொடுங்காயமாகும். அதைத் தவிர, மேலே பட்டியலிடப்பட்டுள்ள பிற காயச்சான்றிதழ்களில் அதில் குறிக்கப்பட்ட காயங்கள் இ.த.ச பிரிவு 320ன் பாற்படுவதாக அமையவில்லை. எனவே, மேற்படி ஆவணங்கள், இவ்வழக்கின் புகார், முதல் தகவல் அறிக்கை மற்றும் காவல்துறை அதிகாரியின் சாட்சியம் (அ.சா.11) ஆகியவற்றை ஒரு சேர பரிசீலிக்கையில், எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களுள் இ.த.ச.பிரிவு 338ன் கீழான குற்றச்சாட்டு 4 Countsக்கு மட்டுமே நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

**15.** இறுதியாக, அரசுத் தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிய சான்றாவணங்கள் வாயிலாக எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 279, 337 (51 counts), 338 (4 counts), ஆகியவற்றின் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாகவும், ஆகவே இவ்வழக்கின் எதிரி மேற்படி பிரிவுகள் 279, 337, 338ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றத்தை புரிந்த குற்றவாளி எனவும் முடிவு செய்து, குற்றவியல் விசாரணை முறை சட்டம் 255(2) பிரிவின் படி இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.



KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.05.25 18:37:37 +0530

**16.** இந்த வழக்கின் ஒட்டுமொத்த பொருண்மைகளையும், சூழ்நிலைகளையும், இரண்டு நபர்களுக்கு இறப்பு, பலருக்கு கொடுங்காயம் ஏற்பட்டது ஆகியவற்றை கருத்தில் கொண்டு பார்க்கும்போது, எதிரிக்கு நன்னடத்தை சட்டத்தின் கீழ் எவ்வித பலனும் கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. அதேசமயம், எதிரியின் அசட்டைதனத்திற்கு அவருக்கு தக்க தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. சாலை விபத்து வழக்குகளில் தண்டனை விதிப்பது குறித்து மாண்பமை உச்சநீதிமன்றம் ***Dalbir Singh v. State Of Haryana*** *AIR 2000 SC 1677* என்னும் வழக்கின் தீர்ப்பில்

**" 13. Bearing in mind the galloping trend in road accidents in India and the devastating consequences visiting the victims and their families. Criminal Courts cannot treat the nature of the offence under S.304-A, IPC as attracting the benevolent provisions of S.4 of the PO Act. While considering the quantum of sentence, to be imposed for the offence of causing death by rash or negligent driving of automobiles, one of the prime considerations should be deterrence. A professional driver pedals the accelerator of the automobile almost throughout his working hours. He must constantly inform himself that he cannot afford to have a single moment of laxity or inattentiveness when his leg is on the pedal of the vehicle in locomotion. He cannot and should not take a chance thinking that a rash driving need not necessarily cause any accident; or even if any accident occurs it need not necessarily result in the death of any human being; or even if such death ensues he might not be convicted of the offence; and lastly that even if he is convicted he would be dealt with leniently by the Court. He must always keep in his mind the fear psyche that if he is convicted of the offence for causing death of a human being due to his callous driving of vehicle he cannot escape from jail sentence. This is the role which the Courts can play, particularly at the level of Trial Courts, for lessening the high rate of motor accidents due to callous driving of automobiles."** என்று இயம்பியுள்ளது.

**17.** மேற்படி முன்தீர்ப்பை கருத்தில் கொண்டு முடிவாக, எதிரி இந்திய தண்டனை சட்டம் **பிரிவு 279**ன் கீழான குற்றம் இழைத்ததற்கு **6 மாத** காலம் மெய்க்காவல் சிறைத்தண்டனையும் மற்றும் **ரூ.1,000/-**(ரூபாய் ஆயிரம் மட்டும்) அபராதம் விதித்தும், **பிரிவு 337(51 counts)**ன் கீழான குற்றம் இழைத்ததற்கு **தலா 1 வார** காலம் மெய்க்காவல் சிறைத்தண்டனையும் மற்றும் **தலா ரூ.100/-**(ரூபாய் இருநூறு மட்டும் - மொத்தம் ரூ.5,100/-) அபராதம் விதித்தும், பிரிவு **338(4**



KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.05.25 18:37:46 +0530

**counts)**ன் கீழான குற்றம் இழைத்ததற்கு **தலா 2 மாத** காலம் மெய்க்காவல் சிறைத்தண்டனையும் மற்றும் **தலா ரூ.250/-** (ரூபாய் ஐநூறு மட்டும் - மொத்தம் ரூ.1,000/-) அபராதம் விதித்தும், அபராதத் தொகை செலுத்த தவறினால் **(மொத்த அபராதத் தொகை - ரூ.7,100/-)** இந்திய தண்டனை சட்டம் பிரிவு 64ன் கீழ் தலா ஒரு வார காலம் கூடுதலாக மெய்க்காவல் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் மேற்படி சிறைத்தண்டனைகளை எதிரி ஏககாலத்தில் அனுபவிக்க வேண்டும் எனவும் உத்தரவிடப்படுகிறது.

எதிரி வழக்கு விசாரணை காலத்தில் காவலில் வைக்கப்படவில்லை என்பதால் குற்றவியல் விசாரணை முறை சட்டம் பிரிவு 428ன் கீழ் எந்த உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை. அதேபோல, இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் அது குறித்து எவ்வித உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து, பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026 ஆம் ஆண்டு மே திங்கள் 25ஆம் நாள் ஆகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.05.25 18:37:53 +0530

**நீதித்துறை நடுவர்**
**சீர்காழி.**

**1.அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகள்**

| | | |
|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி.1 | திரு. பால்ராஜ் | புகார்தாரர் |
| அரசு தரப்பு சாட்சி.2 | திருமதி. கோமதி | கண்ணுற்ற சாட்சி |
| அரசு தரப்பு சாட்சி.3 | திருமதி. மீரா | கண்ணுற்ற சாட்சி |
| அரசு தரப்பு சாட்சி.4 | திருமதி. தனலெட்சுமி | கண்ணுற்ற சாட்சி |
| அரசு தரப்பு சாட்சி.5 | திருமதி. மாரியம்மாள் | கண்ணுற்ற சாட்சி |
| அரசு தரப்பு சாட்சி.6 | திருமதி. செல்வராணி | கண்ணுற்ற சாட்சி |
| அரசு தரப்பு சாட்சி.7 | திருமதி. ஆச்சிகண்ணு | கண்ணுற்ற சாட்சி |



KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.05.25 18:38:06 +0530

| | | |
|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி.8 | திருமதி. பானுமதி | கண்ணுற்ற சாட்சி |
| அரசு தரப்பு சாட்சி.9 | திரு. ராஜசேகர் | கண்ணுற்ற சாட்சி |
| அரசு தரப்பு சாட்சி.10 | திரு. சிவா | கண்ணுற்ற சாட்சி |
| அரசு தரப்பு சாட்சி.11 | திரு. சுரேஷ் | தற்போதைய உதவி ஆய்வாளர் |

**2.அரசு தரப்பு குறியிடப்பட்ட சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| அரசு தரப்பு சான்றாவணம்.1/ அரசு தரப்பு சாட்சி.1 | 25.02.2017 | அசல் புகார் வாக்குமூலம் |
| அரசு தரப்பு சான்றாவணம்.2/ அரசு தரப்பு சாட்சி.9 | 25.02.2017 | பார்வை மகசரிலுள்ள கையொப்பம் |
| அரசு தரப்பு சான்றாவணம்.3/ அரசு தரப்பு சாட்சி.10 | 25.02.2017 | பார்வை மகசரிலுள்ள கையொப்பம் |
| அரசு தரப்பு சான்றாவணம்.4/ அரசு தரப்பு சாட்சி.11 | 25.02.2017 | முதல் தகவல் அறிக்கை |
| அரசு தரப்பு சான்றாவணம்.5/ அரசு தரப்பு சாட்சி.11 | 25.02.2017 | பார்வை மகஜர் |
| அரசு தரப்பு சான்றாவணம்.6/ அரசு தரப்பு சாட்சி.11 | 25.02.2017 | மாதிரி வரைபடம் |
| அரசு தரப்பு சான்றாவணம்.7/ அரசு தரப்பு சாட்சி.11 | 30.04.2017 | சட்டப்பிரிவு மாற்று அறிக்கை |
| அரசு தரப்பு சான்றாவணம்.8/ அரசு தரப்பு சாட்சி.11 | 28.02.2017 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை |
| அரசு தரப்பு சான்றாவணம்.9/ அரசு தரப்பு சாட்சி.11 | 25.02.2017 | காயச்சான்று(பால்ராஜ்) |
| அரசு தரப்பு சான்றாவணம்.10/ அரசு தரப்பு சாட்சி.11 | 25.02.2017 | காயச்சான்று(சந்திரா) |
| அரசு தரப்பு சான்றாவணம்.11/ அரசு தரப்பு சாட்சி.11 | 25.02.2017 | காயச்சான்று(கோமதி) |
| அரசு தரப்பு சான்றாவணம்.12/ அரசு தரப்பு சாட்சி.11 | 25.02.2017 | காயச்சான்று(பாப்பாத்தி) |
| அரசு தரப்பு சான்றாவணம்.13/ அரசு தரப்பு சாட்சி.11 | 25.02.2017 | காயச்சான்று(பிச்சம்மாள்) |
| அரசு தரப்பு சான்றாவணம்.14/ அரசு தரப்பு சாட்சி.11 | 25.02.2017 | காயச்சான்று(மீரா) |



KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.05.25 18:38:16 +0530

| | | |
|---|---|---|
| அரசு தரப்பு சான்றாவணம்.15/ அரசு தரப்பு சாட்சி.11 | 25.02.2017 | காயச்சான்று(மாரியம்மாள்) |
| அரசு தரப்பு சான்றாவணம்.16/ அரசு தரப்பு சாட்சி.11 | 25.02.2017 | காயச்சான்று(தனலெட்சுமி) |
| அரசு தரப்பு சான்றாவணம்.17/ அரசு தரப்பு சாட்சி.11 | 25.02.2017 | காயச்சான்று(சித்ரா) |
| அரசு தரப்பு சான்றாவணம்.18/ அரசு தரப்பு சாட்சி.11 | 25.02.2017 | காயச்சான்று(மாரியம்மாள்) |
| அரசு தரப்பு சான்றாவணம்.19/ அரசு தரப்பு சாட்சி.11 | 25.02.2017 | காயச்சான்று(செல்வராணி) |
| அரசு தரப்பு சான்றாவணம்.20/ அரசு தரப்பு சாட்சி.11 | 25.02.2017 | காயச்சான்று(ஆச்சிகண்ணு) |
| அரசு தரப்பு சான்றாவணம்.21/ அரசு தரப்பு சாட்சி.11 | 25.02.2017 | காயச்சான்று(பானுமதி) |
| அரசு தரப்பு சான்றாவணம்.22/ அரசு தரப்பு சாட்சி.11 | 25.02.2017 | காயச்சான்று(பழனியாயி) |
| அரசு தரப்பு சான்றாவணம்.23/ அரசு தரப்பு சாட்சி.11 | 25.02.2017 | காயச்சான்று(குஞ்சம்மாள்) |
| அரசு தரப்பு சான்றாவணம்.24/ அரசு தரப்பு சாட்சி.11 | 25.02.2017 | காயச்சான்று(சுந்தரி) |
| அரசு தரப்பு சான்றாவணம்.25/ அரசு தரப்பு சாட்சி.11 | 25.02.2017 | காயச்சான்று(ஆராயி) |
| அரசு தரப்பு சான்றாவணம்.26/ அரசு தரப்பு சாட்சி.11 | 25.02.2017 | காயச்சான்று(விஜயா) |
| அரசு தரப்பு சான்றாவணம்.27/ அரசு தரப்பு சாட்சி.11 | 25.02.2017 | காயச்சான்று(ஜெயந்தி) |
| அரசு தரப்பு சான்றாவணம்.28/ அரசு தரப்பு சாட்சி.11 | 25.02.2017 | காயச்சான்று(குப்பம்மாள்) |
| அரசு தரப்பு சான்றாவணம்.29/ அரசு தரப்பு சாட்சி.11 | 25.02.2017 | காயச்சான்று(காந்திமதி) |
| அரசு தரப்பு சான்றாவணம்.30/ அரசு தரப்பு சாட்சி.11 | 25.02.2017 | காயச்சான்று(பாப்பாத்தி) |
| அரசு தரப்பு சான்றாவணம்.31/ அரசு தரப்பு சாட்சி.11 | 25.02.2017 | காயச்சான்று(அஞ்சம்மாள்) |
| அரசு தரப்பு சான்றாவணம்.32/ அரசு தரப்பு சாட்சி.11 | 25.02.2017 | காயச்சான்று(அஞ்சலை) |



KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.05.25 18:38:25 +0530

| | | |
|---|---|---|
| அரசு தரப்பு சான்றாவணம்.33/ அரசு தரப்பு சாட்சி.11 | 25.02.2017 | காயச்சான்று(காளியம்மாள்) |
| அரசு தரப்பு சான்றாவணம்.34/ அரசு தரப்பு சாட்சி.11 | 25.02.2017 | காயச்சான்று(அம்சவள்ளி) |
| அரசு தரப்பு சான்றாவணம்.35/ அரசு தரப்பு சாட்சி.11 | 25.02.2017 | காயச்சான்று(சுமதி) |
| அரசு தரப்பு சான்றாவணம்.36/ அரசு தரப்பு சாட்சி.11 | 25.02.2017 | காயச்சான்று( அபிராமி) |
| அரசு தரப்பு சான்றாவணம்.37/ அரசு தரப்பு சாட்சி.11 | 25.02.2017 | காயச்சான்று(கருத்தம்மாள் ) |
| அரசு தரப்பு சான்றாவணம்.38/ அரசு தரப்பு சாட்சி.11 | 25.02.2017 | காயச்சான்று(சுமதி குள்ளன் ) |
| அரசு தரப்பு சான்றாவணம்.39/ அரசு தரப்பு சாட்சி.11 | 25.02.2017 | காயச்சான்று( இருசம்மாள்) |
| அரசு தரப்பு சான்றாவணம்.40/ அரசு தரப்பு சாட்சி.11 | 25.02.2017 | காயச்சான்று(குள்ளம்மாள்) |
| அரசு தரப்பு சான்றாவணம்.41/ அரசு தரப்பு சாட்சி.11 | 25.02.2017 | காயச்சான்று(முனியம்மாள்) |
| அரசு தரப்பு சான்றாவணம்.42/ அரசு தரப்பு சாட்சி.11 | 25.02.2017 | காயச்சான்று(ஏலாச்சி) |
| அரசு தரப்பு சான்றாவணம்.43/ அரசு தரப்பு சாட்சி.11 | 25.02.2017 | காயச்சான்று(சுமத்ரா) |
| அரசு தரப்பு சான்றாவணம்.44/ அரசு தரப்பு சாட்சி.11 | 25.02.2017 | காயச்சான்று(செந்தாமரை) |
| அரசு தரப்பு சான்றாவணம்.45/ அரசு தரப்பு சாட்சி.11 | 25.02.2017 | காயச்சான்று(பட்டு) |
| அரசு தரப்பு சான்றாவணம்.46/ அரசு தரப்பு சாட்சி.11 | 25.02.2017 | காயச்சான்று(ராஜகுமாரி) |
| அரசு தரப்பு சான்றாவணம்.47/ அரசு தரப்பு சாட்சி.11 | 25.02.2017 | காயச்சான்று(கலைவாணி) |
| அரசு தரப்பு சான்றாவணம்.48/ அரசு தரப்பு சாட்சி.11 | 25.02.2017 | காயச்சான்று(ஆச்சி) |
| அரசு தரப்பு சான்றாவணம்.49/ அரசு தரப்பு சாட்சி.11 | 25.02.2017 | காயச்சான்று(பாப்பாத்தி) |
| அரசு தரப்பு சான்றாவணம்.50/ அரசு தரப்பு சாட்சி.11 | 25.02.2017 | காயச்சான்று(லல்லி) |



KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.05.25 18:38:32 +0530

| | | |
|---|---|---|
| அரசு தரப்பு சான்றாவணம்.51/ அரசு தரப்பு சாட்சி.11 | 25.02.2017 | காயச்சான்று(ராணி) |
| அரசு தரப்பு சான்றாவணம்.52/ அரசு தரப்பு சாட்சி.11 | 25.02.2017 | காயச்சான்று(பெரியார்) |
| அரசு தரப்பு சான்றாவணம்.53/ அரசு தரப்பு சாட்சி.11 | 25.02.2017 | காயச்சான்று(அபூர்வம்) |
| அரசு தரப்பு சான்றாவணம்.54/ அரசு தரப்பு சாட்சி.11 | 25.02.2017 | காயச்சான்று(ஜானகி) |
| அரசு தரப்பு சான்றாவணம்.55/ அரசு தரப்பு சாட்சி.11 | 25.02.2017 | காயச்சான்று(அஞ்சம்மாள்) |
| அரசு தரப்பு சான்றாவணம்.56/ அரசு தரப்பு சாட்சி.11 | 25.02.2017 | காயச்சான்று(செண்பகவள்ளி) |
| அரசு தரப்பு சான்றாவணம்.57/ அரசு தரப்பு சாட்சி.11 | 25.02.2017 | காயச்சான்று(தனவள்ளி) |
| அரசு தரப்பு சான்றாவணம்.58/ அரசு தரப்பு சாட்சி.11 | 25.02.2017 | காயச்சான்று(கஸ்தூரி) |
| அரசு தரப்பு சான்றாவணம்.59/ அரசு தரப்பு சாட்சி.11 | 25.02.2017 | காயச்சான்று(சண்முகபிரியா) |
| அரசு தரப்பு சான்றாவணம்.60/ அரசு தரப்பு சாட்சி.11 | 25.02.2017 | காயச்சான்று(அபிநயா) |
| அரசு தரப்பு சான்றாவணம்.61/ அரசு தரப்பு சாட்சி.11 | 25.02.2017 | காயச்சான்று(அட்சயா) |
| அரசு தரப்பு சான்றாவணம்.62/ அரசு தரப்பு சாட்சி.11 | 25.02.2017 | காயச்சான்று(திரிபுரசுந்தரி) |
| அரசு தரப்பு சான்றாவணம்.63/ அரசு தரப்பு சாட்சி.11 | 25.02.2017 | காயச்சான்று(விமலா) |
| அரசு தரப்பு சான்றாவணம்.64/ அரசு தரப்பு சாட்சி.11 | 25.02.2017 | காயச்சான்று(சாமிதுரை) |
| அரசு தரப்பு சான்றாவணம்.65/ அரசு தரப்பு சாட்சி.11 | 25.02.2017 | காயச்சான்று(சங்கர்) |

3.அரசு தரப்பு சான்று பொருள் :

| | |
|---|---|
| அரசு தரப்பு சான்று பொருள். | இல்லை |



KAILAASH R

Digitally signed by KAILAASH R
Date: 2026.05.25 18:38:40 +0530

4.எதிரி தரப்பு சாட்சி:- இல்லை

5.எதிரி தரப்பு சான்றாவணங்கள்:- இல்லை

KAILAASH R

Digitally signed by KAILAASH R
Date: 2026.05.25 18:38:47 +0530

நீதித்துறை நடுவர்,
சீர்காழி.

**குறிப்பு**

1. தீர்ப்பு பற்றிய தகவல் காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.
2. இவ்வழக்கு விசாரணையின்போது எதிரி நீதிமன்ற பிணையில் இருந்தார்.
3. இவ்வழக்கில் சாட்சிகள் 3 முறைக்கு மேல் விசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு அழைக்கப்படவில்லை.
4. எதிரியால் அபராதம் ரூ.7,100/– செலுத்தப்பட்டுள்ளது.

**நகல்**

மாண்பமை தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், மயிலாடுதுறை அவர்களுக்கு பணிந்து சமர்பிக்கப்படுகிறது.